மூன்றாவது
தடத்தில்
குரல்

அஸ்கர் பாறும் தமிழர் ஒன்றியத்தின் மாதாந்த ஏடு

# ஒன்றியத்தின் குரல்

மாசி 2010 | ஓசை 1

# 2010இன் புதிய நிர்வாகம்!



1994 இல் ஆரம்பிக்கப்பட்ட எமது தமிழர் ஒன்றியம் கடந்த சிலவருடங்களாக எதிர்பாராத வகையில் சில இடையூறுகளைச் சந்தித்தது யாவரும் அறிந்ததே. இவ் இடையூறுகளை வெகு நிதானத்துடன் எதிர்வு கொண்டு சவால்களை வென்றதுமட்டுமின்றி பல வகையான ஆக்க பூர்வமான முயற்சிகளையும் முன்னெடுத்தது. இவ்விடயத்தில் கடந்த நிர்வாகங்களிற்கும் ஒத்துழைத்த அங்கத்தவர்களுக்கும் நாம் மிகவும் கடமைப்பாடுடையவர்களாகின்றோம்..
2010 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. நிர்வாக உறுப்பினர்கள் அனைவருமே போட்டிகளின்றி தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

கடந்த வருடங்களைப்போலவே ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களைப்பேணவும் புதியதாக உருவாக்கவுமான கடமை எம்முன்னே காத்திருக்கின்றது.

தொடக்கி வைக்கப்படும் வேலைத்திட்டங்கள் சிறப்பாகவும் தொடர்ச்சி பெறவும் வேண்டிய நிலையில்.....தொடர்ந்தும் கடந்த வருடங்களைப்போலவே உங்களிடமிருந்து தாராளமான பங்களிப்பையும் ஆதரவினையும் எதிர்பார்க்கின்றோம்.

இது ஒன்றே நாம் புத்துணர்வு கொள்ளவும் செயற்பாடுகளில் தீவிரமாக இயங்கவுமான உந்துசக்தி. இத்தகைய உந்து சக்தியுள்ள அங்கத்தவர்களிருக்கும் வரை எம்முன் சவால்களாக எழும் சிறு இடையூறுகளனைத்தும் தவிடு பொடியாவது நிட்சயம்.

## புதிய நிர்வாக சபை

தலைவர்: கணேஸ் ரவீந்திரன்
உபதலைவர்: திருக்குமார்
செயலாளர்: தங்கவேல்
உபசெயலாளர்: ரவீந்திரநாத்
பொருளாளர்: அற்புதராஜா
கலைச்செயலாளர்: சிவானந்தன்
உப கலைச்செயலர்: யோகமனோகரி
கல்வித்துறைச்செயலர்: தங்கவேல்
விளையாட்டுத்துறைச்செயலர்: குலம்
உபவிளையாட்டுத்துறைச்செயலர்: மனோ
நிர்வாகசபை உறுப்பினர்: தனபாலன்
நிர்வாகசபை உறுப்பினர்: றோகான்
நிர்வாகசபை உறுப்பினர்: சிவகுமார்
கணக்குப்பரிசோதகர்: சூரியகுமார்

## அறிவித்தல்

நடப்பாண்டிற்கு தமிழ் அறிவாலயத்தின் அதிபராக தொடர்ந்தும் திருமதி கலைவாணி தனபாலன் அவர்கள் நிர்வாகத்தினாலும் உப அதிபராக திருமதி நிரஞ்சலா சதீஸ் அவர்கள் கல்வித்துறையினாலும் தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள்.
கல்வித்துறையானது நிர்வாகச் செயற்பாடுகளின் தேவை கருதி கல்வித்துறைச்செயலர் தங்கவேல், அதிபர் கலைவாணி, நிர்வாக உறுப்பினர் சிவகுமார், உப அதிபர் நிரஞ்சலா உள்ளடங்கிய நிர்வாக அமைப்பாகின்றது.

ஒற்றுமைக்கு உதாரணம் ஒன்றியமாகட்டும்!

# மாறிவரும் சூழலும் மயக்கமானகருத்துக்களும்...

ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டு பதினாறு வருடங்களைக்கடந்துவிட்டது. பதினாறு வருடங்களுக்கு முன்னர் அஸ்கர்,பாரும் வாழ்தமிழர்களது நலன் கருதி அமைக்கப்பட்ட இவ்வமைப்பு ஆரம்பத்தில் தனது தேவைகளை சிறிய அளவிலேயேபேணியது என்பது உண்மையே.சிறிய அளவிலான ஒன்றுகூடல்களும் சிறுசிறு கலாச்சார விழாக்களும் என்று மட்டுப்படுத்தப்பட்டே இருந்தது. இவ்வகையான சூழல் ஆரோக்கியமானதாகவும் நட்புணர்வு,புரிந்துணர்வுகளுக்கு விசாலமான இடமளிபடபதாகவும் இருந்தது. காலப்போக்கில் ஒன்றியத்தினது தேவைகள் விரிவுபடுத்தப்பட்டு பாடசாலையும் தொடர்ந்து பத்திரிகை, இணையத்தளம், கணனிக்கல்வி, உடற்பயிற்சி, விளையாட்டு என வேலைத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.இவ்வகையான வளர்ச்சி நன்மைகளை உருவாக்கியபோதும் கூடவே நட்புணர்வு,புரிந்துணர்வுகளுக்குப் பாதகமான அம்சங்களையும் வளர்த்தெடுத்தது.இத்தகைய பாதகமான அம்சங்கள் உருவாவதற்கு ஒன்றியம் எடுத்த சில தவறான முடிவுகளும் தனிநபர்கள் ஒன்றியத்தினைத் தமது தனிநபர்,அரசியல் இலாபங்களுக்காகப் பயன்படுத்த முனைந்ததும் காரணமாயின என்றே கூறவேண்டும். இவ்விடத்தில் ஒன்றியத்தின் தனிநபர் பிரச்சனைகள் குறித்து விளக்கமாகக் கூறியேயாக வேண்டும்.தனிநபர் பிரச்சனைகளுக்கான காரணத்தை ஆய்வு செய்வோமானால் அவையனைத்துக்கும் தனிநபர் நலன்கள் அடிப்படையாக இருப்பதும், தனிநபர்மீது ஒன்றியத்தின் நடைமுறைசார்ந்து விமர்சனம் செய்யாது தனிநபர்மீது சேறுபூசும் விதமாக விமர்சிப்பதும், இவ்வகை நடைமுறைகளுக்கு ஒன்றியத்தின் நிர்வாகங்கள் முடிவுகளை எடுப்பதில் இன்னல்படுவதும் வழக்கமான ஒன்றாகிவிட்டது.

**இந்நிலை மாறவேண்டுமானால் ஒன்றிய அங்கத்தவர்களும் நிர்வாகங்களும் ஒன்றியத்தினது நடவடிக்கைகள் சம்பந்தமான விமர்சனம் எதுவாயினும் அதை தனிநபர் சம்பந்தமான பிரச்சனையாகப் பார்க்காது ஒன்றியம் சம்பந்தமான பிரச்சனையாகப் பார்க்கப் பழகிக்கொள்ள வேண்டும்.**

எது எப்படியோ 2005 இல் அரசியல் சார்ந்த அங்கத்தவர்கள் தமது நலன்களுக்காக ஒன்றியத்தினை உபயோகிக்க முடியாத நிலை தோன்றியதால் பிளவுற்று புதியதோர் இணையம் என்ற அமைப்பை உருவாக்கினர். இவர்களது நோக்கம் அஸ்கர்,பாரும் தமிழர்களின் நட்புணர்வு,புரிந்துணர்வு என்பவற்றைவிட அரசியல்நலனே முனைப்புற்றதாகக் கருதவேண்டியுள்ளது.



**சூழலைச்சரியாக விளங்கிக்கொள்வதும் சூழலுக்கேற்றவாறு தெளிவான கொள்கை நடைமுறைகளைக் கையாள்வதும்தான் உண்மையான ஒரு மனிதனின் கடமையென்பதை யாவரும் உணரவேண்டும்.**

**இவர்களது தூரநோக்கற்ற இம்முடிவு நட்புணர்வு,புரிந்துணர்வுக்கு அடித்த சாவுமணியே!**

5 வருடங்கள் இருவேறு அமைப்புகளாக இயங்கும் இவ்விரு அமைப்புக்களும் மாறிவரும் இன்றைய சூழலில் தமது தவறுகளை உணரத்தொடங்கியுள்ளன. முக்கியமாக எதிர்காலச் சந்ததியினைக் கருத்திலெடுக்காது **அரசியலை மாத்திரமே** முன்னிலைப்படுத்தி எடுத்த முடிவின் தவறை நன்றாக உணரத்தலைப்பட்டுள்ளனர். இது ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையாகும். ஆனால் இந்நிலை தொடர்பாக பலவிதப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. கருத்துக்கூறும் நபர்கள் தமது கடந்தகாலத் தவறுகளை ஏற்றுக்கொள்ள மனமின்றி தவறுகளுடன் **தவறான மனிதர்களாய்** வாழவிரும்புகின்றனர். திரும்பவும் தவறையே செய்கின்றனர். சிலர் இதை ஒரு கௌரவப்பிரச்சனையாக வெளிப்படுத்தி உணரப்படும் விடயத்திற்கு மாறாக நடைமுறை சார்ந்த சிக்கல்களைப் பெரிதாக்கித் திசைதிருப்பிக் கருத்துரைக்கின்றனர். இவை பலவிதமான மயக்கங்கள் கொண்ட கருத்துக்களாகும். இவ்வகையான திரிபுகளிலிருந்து தெளிவடைவதென்பது உங்கள் கடமையாகும்.

## இது தொடர்பான ஒன்றியத்தின் தீர்மானம்

இன்றைய சூழலைப்புரிந்துகொண்டதனூடாக இனிவரும் காலங்களில் அஸகர், பாரும் தமிழ் சிறார்கள் தொடர்பான வேலைத்திட்டங்களில் முடியுமானவரை நட்புணர்வு, புரிந்துணர்வுகளை வளர்க்கும் விதமாக மிகநெகிழ்ச்சியான போக்குகளைக்கடைப்பிடித்து வகுத்துச் செயற்படுவதென ஒன்றியத்தின் நிர்வாகம் முடிவெடுத்துள்ளதை அனைத்து அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

## கௌரவிப்பு தொடர்பான ஒன்றியத்தின் முடிவு

நடப்பாண்டினதும் நடப்பாண்டிற்கு முன்னைய ஆண்டினதும் பங்காற்று உறுப்பினர்களது (நிர்வாகக் கட்டமைப்பு) குடும்பம் சம்பந்தமான நிகழ்வுகளில் கலந்துகொள்வதுடன் அவர்களது ஒன்றியத்திற்கான பங்களிப்பைக் கௌரவப்படுத்துவதை ஒன்றியம் தீர்மானமாக்கியுள்ளதை அனைத்து அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

## புத்தாண்டு விழா

வழமைபோல் இவ்வருடமும் தமிழ் புத்தாண்டு விழா 14.04.10 இல் Dønski Fritidshus இல் கொண்டாடப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான தகவல்கள் பின்னர் தரப்படும்.

## தைப்பொங்கல் விழா

வழமைபோல் கடந்த 17.01.10 இல் Dønski Fritidshus இல் தைப்பொங்கல் விழா இனிதாக நடைபெற்றது. வருடாந்தப் பொதுக்கூட்டமும் அன்றே நடாத்தப்பட்டு புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்ற காரணத்தினால் கலை நிகழ்ச்சிகளை நடாத்த முடியாததை மிகுந்த மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## மீண்டும் ஒன்றியத்தின் குரல்

நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த ஒன்றியத்தின் குரல் மீண்டும் உங்கள் கரங்களில் தவழ்கின்றது. நிர்வாகத்திற்கும் அங்கத்தவர்களுக்குமான தொடர்பாடலுக்கு முக்கிய பாத்திரம் வகிக்கும் வண்ணம் உருவகம் பெற்ற குரல் கடந்த கால தவறுகளிலிருந்து கற்றுக்கொண்டு புதிய ஒழுங்கில் சீரமைப்புக்குள்ளாகி உங்கள் ஆதரவுடன் தொடர்ந்து வெளிவர இருக்கின்றது.

புதிய பகுதியாக சிறுவர்களுக்கான பாலர் திடல் உருவாக்கப்பட்டு வெளிவருகின்றது. இதற்கான முன்னெடுப்புகள் உருவாக்கப்பட்டு ஒழுங்கமைப்புக்கும் பங்களிப்புக்கும் உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றது.

தற்போதய பங்காளிகள்:

தனபாலன்: தகவல் சேகரிப்பு

றோகான் திவ்யானந்தன: தகவல் சேகரிப்பு

கலைவாணி தனபாலன்: வடிவமைப்பு

சிவகுமார்: எழுத்தமைப்பு,தகவல் சேகரிப்பு

தங்கவேல் கணபதிப்பிள்ளை: தொடர்பாளர்,அச்சு,விநியோகம்

# வேலைத்திட்டங்கள்

## WWW.ABTF.NO

**ASKER & BÆRUM TAMILSKE FORENING**

2005 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் வெப் இணையத்தளம் ஐந்தாண்டினை நிறைவு செய்து தனது ஆறாம் ஆண்டில் காலடி பதிக்கின்றது. ஆரம்பத்தில் ஒன்றியத்தின் செயற்பாடுகளில் ஒன்றாகவும் அங்கத்தவர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான தொடர்பாடலுக்கான முக்கிய ஊடகமாகப் பாவிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்ட தளம் நாளடைவில் இளையதலைமுறையினரின் திறமைகளை அடையாளம் கண்டு அவர்களைக் கொண்டே youth club எனும் இணைப்பு நிர்வகிக்கப்படுகின்றது.இவ் வேலைத்திட்டத்தின் தொடர்ச்சியை வேண்டி நிற்கும் ஒன்றியம் இவ் இணையத்தளத்தை சிறப்புடனும் ஒழுங்கான நிர்வகிப்பை மேற்கொள்வதையும் இவ்வருடத்திற்கான வேலைத்திட்டமாக தீர்மானம் எடுத்துள்ளது.




# நிகழ்ச்சிகள் 2010

நடப்பாண்டுக்கான கலை கலாச்சார வேலைத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு நிகழ்ச்சிநிரல்கள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. நடக்க இருக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் முறையாக ஒருங்கமைக்கப்பட்டு நிர்வாகசபை உறுப்பினர் ஒருவரின் நேரடி வழிநடத்தலில் நிறைவேற்றுவதற்குத்திட்டமிடப்பட்டுள்ளது. மேற்குறித்த நிகழ்ச்சிகளின் விபரங்கள் கீழ்வருமாறு

- ♦ ஒன்றிய ஆண்டு விழா
- ♦ ஒன்றிய விளையாட்டுப்போட்டி
- ♦ சுற்றுலாவுடன் இணைந்த கோடை விடுமுறைக் களியாட்டம்
- ♦ சரஸ்வதி பூசை
- ♦ தீபாவளி
- ♦ கரப்பந்தாட்டம்
- ♦ சிறுவர் உதைபந்தாட்டம்
- ♦ நத்தார் விழா

இந்நிகழ்வுகளுக்கான காலமும் இடங்களும் பின்னர் அறியத்தரப்படும்.

## கல்வித்துறை வேலைத்திட்டங்கள்

நடப்பாண்டில் புகைப்படக்கலை வகுப்புடன் ஆரம்பித்து Mammut program, Microsoft exel program போன்ற வகுப்புக்களை நடாத்துவதற்கு கல்வித்துறை தீர்மானித்துள்ளது. இந்த வகுப்புக்கள் தொடர்பான விபரங்களும் விளக்கங்களும் பின்னர் அறியத்தரப்படும்.

மாணவர்களின் பொதுஅறிவினை விருத்திசெய்யும் முகமாக விழாக்களின் போது **millionøreær, smart smarter smartest 2010, திறமைக்குப்பரிசு** போன்ற நிகழ்ச்சிகளையும் இவ் நிகழ்ச்சிகளுக்கான தயாரிப்புக்களில் மாணவர்கள் பங்குகொள்ளும் வகையிலும் வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு எண்ணியுள்ளோம். ஆர்வமுள்ளவர்கள் கல்வித்துறையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.